புதிய அவையம்
PUTHIYA AVAIYAM
A Peer-reviewed Journal & Bilingual Journal for Arts and Humanities
Vol: 08, Issue : Special
SACRED HEART COLLEGE (AUTONOMOUS) Tirupattur - 635 601 Tamil Nadu, India.
SACRED HEART RESEARCH PUBLICATIONS March 2025 ISSN: 2456-821X

# 47. TML1186 - பாரம்பரியக் கூத்தில் பெண்களின் பங்களிப்பும் கூத்தரின் கருத்தும்

சுந்தரலிங்கம் சந்திரகுமார்,
முதுநிலை விரிவுரையாளர், நுண்கலைத்துறை, கலைகலாசாரப் பீடம்,
கிழக்குப்பல்கலைக்கழகம், இலங்கை.

## திறவுச் சொற்கள்: அறிமுகம்

*சமுதாயமயப்பட்ட அரங்காகக் கூத்தரங்கு வெளிக்கொணரப்படுவதற்கும் கூத்தின் சமுதாயத் தன்மையை எடுத்துச் செல்வதற்கும் மிக முக்கிய ஊடகமாகவும் உயிராகவும் திகழ்பவர்கள் பெண்களாவர். கூத்து சட்டங்கொடுத்தல் முதல் அரங்கேற்றம் வரை கூத்தாட்டம் வலுவாவதற்கு, கொண்டாடுவதற்கு, விழாக்கோலம் பூணுவதற்கு, அறிவுள்ளதாக்குவதற்கு, திட்டமிட்ட முகாமைத்துவ ஒழுங்குபடுத்தலுக்கு என அனைத்துச் செயற்பாடுகளிலும் பெண்களே உறுதுணையாக உள்ளனர். கூத்தாற்றுகையின் படிப்படியான வளர்ச்சியில் பெண்களின் பங்களிப்பும் ஊடாட்டமும் அவசியமாகும். பெண்கள் கூத்தாடும்போது ஆடல், பாடல், அது தொடர்பான கதைகள், ஆற்றுகை முறைகள், அதன் மதிப்பீடுகள், முன்னைய வரலாறுகள் என்பவற்றை எடுத்துக்கொடுத்து பலம் சேர்ப்பவர்களாவர். கூத்தருக்குப் பலவழிகளில் உதவுபவர்களாவர். அவ்வாறே கூத்தரும் தமக்குள் தரமாக ஆடவும் பாட்டுக்களைப் பாடவும் விருப்புடன் ஆற்றுகை செய்யவும் இது உந்து சக்தியாக இருக்கின்றது.*

## பெண்கள் கூத்து ஆடியமை தொடர்பான கருத்துக்கள்

*கூத்தர் சமுதாயத்தினரிடம் பெண்கள் கூத்து ஆடியமை தொடர்பான கருத்துக்கள் கள ஆய்வின் மூலம் கேட்டறியப்பட்டது. கூத்தின் தொடர்செயற்பாடுகளில் ஊருக்குள் கலந்துகொண்டு கூத்தாடியபோது கேட்டறிந்தும், அவதானித்தும் இங்கு வகைப்படுத்தப்படுகின்றன. சமுதாயம் ஆண்களின் அதிகார நிலைநின்ற கருத்துருவாக்கக் கட்டமைப்பினாலும் பண்பாட்டுக் கட்டுப்பாட்டினாலும் இவை ஓரங்கட்டப்படுகின்றன. அண்ணாவியார், கூத்தாடிய சமூகத்தினர் போன்றோர்; கூத்தாடியமை தொடர்பாக ஒரே கருத்தையே தந்தனர்.*

*அண்ணாவிமாரான க.நோஞ்சிப்போடி, கு.பொன்னம்பலம், வெ.பரமக்குட்டி, க.கந்தப்போடி, ஐ.அரசரெட்ணம், வே.தம்பிமுத்து போன்ற மூத்த அண்ணாவிமார்களிடம் கூத்தில் பெண்கள் ஆடி இருக்கார்களா? என வினவியபோது அவர்கள் தந்த பதில்களைப் பின்வருமாறு நோக்கலாம். "எங்கட காலத்தில கூத்தில ஆடல்ல. ஆடவரல்ல. பெண் கூத்துக்கு ஆண்கள்தான் ஆடுறாங்கள்" (நேர்காணல்: க.கந்தப்போடி, ஐ.அரசரெட்ணம், வே.தம்பிமுத்து) என்கின்றனர்.*

*இதற்கான காரணம் என்ன என்றதும், "அந்த நாளையில பொம்பிளப் பிள்ளைகளுக்கு பயம் கூட இருந்தது. 2ஆம், 3ஆம் ஆண்டுக்குமேல் படிக்க விடமாட்டாங்க, படிக்கக் கூடாது. வெட்கமில்லயா? நாளைக்கு ஒருவண்ட கையில புடிச்சிக் கொடுக்க வேணும் எலுவா?" (நேர்காணல்) என அண்ணாவியார் வே.வல்லிபுரமும், "பயப்பிடுவாங்க வெக்கப்படுவாங்க என்றதால்தான், பெண் கூத்துக்கு ஆண்கள ஆட வைச்சாங்க" (நேர்காணல்) என அண்ணாவியார் நோஞ்சிப்போடியும், "வெட்கம், மானம், மரியாதை என்றதாலதான் ஆடவும் விடல்ல, ஆடவும் வரல்ல" (நேர்காணல்) என அண்ணாவியார் அரசரெட்ணமும் கூறுகின்றனர். ஆனால், மூதாட்டி இதுபற்றிக் கூறும்போது "அவங்க (ஆண்கள்) ஆட விடமாட்டங்க. விடல்ல, இதால பெண்களுக்குப் பயம்தானே" (நேர்காணல்: மு.பவளக்கொடி) என்றார். இதன்மூலம் ஆண்கள் கூத்தாட விடவில்லை எனும் கருத்தே நிலவுவது குறிப்பிடத்தக்கது.*

*இதனை நோக்கும்போது கூத்தாற்றுகையில் பெண்கள் ஆடவில்லை என்பதற்கு ஒரேவித கட்டமைப்பே வகுக்கப்பட்டுள்ளமை புலனாகின்றது.*

*இதுபற்றி அண்ணாவியாரின் மகள் ஒருவர் கூறும்போது, "எனக்கு கூத்துப் பாட்டு தெரியும் பழக்கக்குள்ள பாப்பன் சில கூத்துக்களில் பாட்டை அப்பாவுக்கு நான்தான் எழுதிக் கொடுக்கிற" (நேர்காணல்: க.சத்தியரூபி) என்றார். கூத்தரங்கின் தொடர் செயற்பாட்டில் நேரடியாக அண்ணாவியாராகவும்*

தாளக்காரராகவும் 'கொப்பி மனேச்சராகவும்' இருந்தமை பாரம்பரிய அரங்கில் இல்லை எனலாம். ஆனால், அண்ணாவிமாரின் மனைவியர், மகள்மார் மத்தளம் அடிக்கப் பழக்கியுள்ளனர். ஏனெனில், மத்தளம் வீட்டில் இருப்பதனால் கேட்டுக்கேட்டு பழகியமையால் அதனை உற்சாகமாக உடம்புக்குள் எடுத்துக்கொண்டும் கேட்டும் பழகியுள்ளனர். "என்ட மனிசி மத்தளம் அடிப்பாவு எல்லாத் தாளமும் அவவுக்கு தெரியாது" (நேர்காணல்) என்று வெ.பரமக்குட்டி அண்ணாவியார் கூறினார். அண்ணாவியாரின் மனைவி ப.தங்கம்மா கூறும்போது "நான் ஊருக்குள்ள கூத்து ஆடக்குள்ளப் பார்த்து மத்தள அடியை விளங்கியதாலும், வீட்ட மத்தளம் இருந்ததாலும் அடிச்சிப் பழகினேன். வடமோடிக்கு அடிப்பன்" (நேர்காணல்: ப.தங்கம்மா) என்றார்.

ஆண்களே பெண் கூத்தைத் தாங்கி ஆடுவர். கூத்தரங்கில் குரலின் மேன்மை, உடலின் அமைப்பு, நளினம், முகபாவம் நிறையப் பெற்ற ஆண்களே ஈடுபடுவர். ஆனால், ஆண் கூத்தர் பெண் கூத்துக்குப் போவது தரக்குறைவாக எண்ணுவதாகவும் கூறப்படுகின்றது. இங்குதான் ஏன் பெண்களைக் கூத்தாட எடுப்பதில்லை எனும் வினா எழுகின்றது.

கூத்துப் பழகும் காலங்களில் அப்பா, அண்ணா, தம்பி, கணவன் ஆகியோர் கூத்தாடும்போது பார்த்து மகிழ்பவர்கள் பெண்கள். இதனால், பெண்கள் கூத்தின் தாளக்கட்டுக்கள், பாடல்கள், ஆட்டமுறைகள் என்பவற்றை எடுத்துக் கூறுபவர்களாகவும் கூத்தர்கள் அதனை மறக்கும்போது வீட்டிற்கு வந்து சொல்லிக் கொடுப்பவர்களாகவும் உள்ளனர். அத்துடன் பாடிக்காட்டுதல், ஆடிக்காட்டுதல், கதைகளை விளக்குதல், மற்றவர்களுடன் ஒப்பிடுதல் என்பவற்றைச் செய்பவர்களாகவும் காணப்படுவர். இது கூத்தாற்றுகையின் போது திரை மறைவில் இடம்பெறுவது வழக்கமாகும். அத்தோடு, மூத்த பெண்கள் கூத்தாடும் களத்தில் பாட்டின் மெட்டு, தாளம் வாசித்தல், மத்தளம் அடித்தல், தரு எடுத்தல் என்பவற்றில் தவறுகள் ஏற்படும்போது அதனை அந்த இடத்திலேயே சுட்டிக்காட்டி, விவாதித்து சரியானதை எடுத்துக் கூறுவதும் உண்டு. குறிப்பாக, கூத்தர், அண்ணாவிமார் கூத்துப் பாடல்களை மறக்கும் சந்தர்ப்பத்தில் ஞாபகத்திற்குக் கொணர்ந்து சொல்லிக் கொடுப்பவர்களாகவும் உள்ளனர். இதனால், கூத்து வெளியில் பெண்கள் தங்களது நினைவுகளைப் பகிர்ந்து ஞாபகங்களை வெளிப்படுத்துவது அவர்களது ஈடுபாட்டையும், வாழ்வியல் ஊடாட்டத்தையும் காட்டுகிறது.

கூத்துப் பழக்கும்போது தாளக்கட்டுக்கள், விருத்தங்கள், தருக்கள், பாடல் மெட்டுக்கள் என்பவற்றைப் பாடிக்காட்டி ஆட்டங்களைத் திருத்தி ஆற்றுகையைத் தரமானதாக்குவர். கூத்தருக்கு ஏட்டினையும் கூத்துப் பனுவலையும் வாசித்துச் சொல்லிக்கொடுப்பதும் அதனைப் பிரதி பண்ணுவதும் பெண்களால் செய்யப்படுகின்றன. வாசிக்க முடியாத கூத்தருக்கு வீட்டில் பாடலைப் பாடிக்காட்டிச் சொல்லிக்கொடுப்பதும் உண்டு.

'கூத்துப் பனுவலைப்' பிரதிபண்ணி கொப்பிக்காரருக்குக் கொடுப்பதும் வழமையாகும். இதனைக் 'கொப்பிபார்ப்பவர்' ஒருவர் கூறுவதனூடாக அறியலாம். "நான் பெண் கூத்தாடுவன். இப்ப, கொப்பிபார்ப்பவராக (ஏடுபார்ப்பவர்) இருக்கன். இந்த நேரத்தில எனது மகள்தான் கூத்துக்கொப்பியைப் பிரதி பண்ணித் தருவார்" (நேர்காணல்) எனக் கூறினார் சி.யோகநாதன். அவ்வாறே, அண்ணாவியாரும் "தனது கூத்துக் கொப்பியை கிழி~லீவும் ராஜேஸ்வரியும் மாறி மாறி எழுதிப் பிரதிபண்ணித் தந்துள்ளதாகக் கூறினார்" (நேர்காணல்). இவ்வாறே, கூத்தாடும் எல்லா ஊரிலும் பெண்கள் ஆற்றுகை வலுப்பெற உறுதுணை செய்கின்றனர்.

அவ்வாறே, கூத்தைத் தாமே விரும்பி ஆர்வத்துடனும், ஈடுபாட்டுடனும் செயற்பட்டமை ஊர்களில் இடம்பெற்றுள்ளது. குருந்தையடி முன்மாரியில் வசிக்கும் ஞா.பரமேஸ்வரி என்பவர் 'அனுருத்திரன் நாடகம்' வடமோடிக் கூத்தை அவரது விருப்பத்துடன் பழகியதாகக் கூறினார். மேலும், "எனக்கு சேவை செய்ய விருப்பம். எனது கணவரின் உதவியுடன் சின்னாக்களைச் சேர்த்து பழக்க உதவினன். மேஸ்திரியாரிட்ட கூத்துடுப்ப எடுத்துக் கூத்தை அரங்கேற்றி முடித்தம்" (நேர்காணல்: ஞா.பரமேஸ்வரி) எனவும் குறிப்பிட்டார்.

கூத்துப் பார்த்தல், இரசித்தல், கூத்தாட உதவுதல், ஆடிப் பார்த்தல், பாடிப் பார்த்தல் ஆகியவற்றைச் செய்யும் ஆளுமையுள்ள பெண்கள் ஏன் கூத்தாட அனுமதிக்கப்படுவதில்லை? என்பதும் இவ்வாறு செயற்படுபவர்கள் கூத்தாட விரும்பியிருக்கமாட்டார்களா? என்பதும் சிந்தித்துப் செயற்பட வேண்டியதாகும். கூத்தாடுவதற்கு விருப்பமும் ஆசையும் அவாவும் இருந்தும் ஆண்களின் கருத்தியல் கட்டமைப்பும், சமுதாயக் கட்டிறுக்கமும் அதனை மேலெழும்ப விடவில்லை. கோயில் தளங்கள் கூத்தாடும் இடமாதலால், பெண்களின் மாதவிலக்குக் காலங்களில் கோயிலுக்குப் போகக்கூடாது எனச் சமயம் கட்டமைக்கப்பட்டதைக் காரணமாக எடுக்கின்றமையும் அவதானத்திற்குரியது.

அதேவேளை, அண்ணாவியார் க.கந்தப்போடி "நான் பழக்கின மூன்று கூத்துக்கு மாசிலாமணி சீதேவிப்பிள்ளை கொப்பி பாத்தவ பாட்டு எடுத்துத்துத் தருவாவு, முதல் வரியப் படிப்பாவு, அந்தப் பாட்டுக்கு மத்தளமடிப்பன். கூத்துப் பழகி அரங்கேற்றும் வரை அவதான் கொப்பி பாத்தவ" (நேர்காணல்)

என்றார். சமுதாயத்தில் இவ்வாறான சந்தர்ப்பங்கள், ஊக்குவிப்புக்கள் வாய்க்கும்போது பெண்கள் தமது ஆளுமைகளைப் பயன்படுத்தித் திறனை வெளிக்காட்டியுள்ளமை மனங்கொள்ளத்தக்கது. முன்னைய இரு ஆய்வுகளும் இது தொடர்பாகக் குறிப்பிடப்படவில்லை. அவ்வாறு ஆராய்ந்திருந்தால், பெண்களின் மத்தள வாசிப்பு, அவர்கள் கூத்துப்பாட்டில் தேர்ச்சி பெற்றமை போன்றவற்றை வெளிக்கொணர்ந்திருக்கலாம்.

**கல்வி நிறுவனங்களின் கூத்தில் பெண்கள்**

கூத்தின் வரலாற்றோட்டத்தில் கூத்து கற்கையாக மாறிய காலத்தில் பெண்கள் கூத்தாடுவது சாத்தியமாகின்றது.

• 2002ஆம் ஆண்டில் பங்குகொள் ஆய்வின் தொடர் செயல்வாதத்தினால் உருவான கூத்து மீளுருவாக்கத்தின் போது பெண்கள் கூத்தின் ஒவ்வொரு செயற்பாட்டிலும் தமது ஆளுமையை பிரயோகித்தனர். களரியில் கூத்தை ஆடினர். இது இவ்வாய்வு முறை தந்த பாரிய வெற்றியாகும். பின்னர் இவை பற்றி ஆராயப்படும்.

• கிழக்குப் பல்கலைக்கழகத்தில் நுண்கலைத்துறை மாணவிகள் 2012ஆம் ஆண்டு காலப்பகுதியில் களரியில் கூத்தாடியுள்ளனர். சீலாமுனை, மாமாங்கம், கொம்மாதுறை, பல்கலைக்கழக வளாகம், அம்பாறை ஆகிய இடங்களில் வட்டக் களரியில் பெண்கள் ஆடி கூத்தின் உயிர்ப்பை மேலும் வலுப்படுத்தினர். மழைப்பழம் வடமோடிக் கூத்து, கண்டியரசன் தென்மோடிக் கூத்து இவ்வாறு ஆடப்பட்டது. அலங்காரரூபன் தென்மோடிக் கூத்தும் சுமார் ஏழு மாதங்களுக்குப் பழக்கி ஆற்றுகையினூடாகக் கற்பிக்கப்பட்ட போது பெண்கள் ஆண் பாத்திரம் தாங்கியும் ஆடினர். இவ்வாய்வாளரும் இக்கூத்துக்கள் கற்பிப்பதற்குப் பொறுப்பாக இருந்து செயற்பட்டவர். கூத்தை ஆற்றுகை மையத்தினூடாக முதன் முதல் 2012ஆம் ஆண்டு இலங்கைக் கிழக்குப் பல்கலைக்கழகத்தில் இவ்வாய்வாளர் கற்பித்தவர். இதனாலேயே இவ்வாறு மாற்றம் ஏற்பட்டது. பின்னர், இவரால் தனது 'அடிப்புறத்தில் இருந்து அடிப்புறத்திற்கு' எனும் கோட்பாட்டின்மூலம் பல்கலைக்கழகத்தினூடாக நடைமுறைப்படுத்தப்பட்டது.

• 2014ஆம் ஆண்டு வைகாசி தொடக்கம் ஆவணி வரை நாவலடியில் பழக்கப்பட்ட "அருச்சுனண் தவநிலை" வடமோடிக் கூத்தில் வேடுவிச்சிக்கும், பார்வதிக்கும் பெண்களே பெண்பாத்திரம் தாங்கி வட்டக் களரியில் ஆடினர். இவர்கள் தமது விருப்புடனே ஆடியதாகக் குறிப்பிட்டனர் (நேர்காணல்: கி.கிருத்திகா). 40 வயது மதிக்கத்தக்க பெண்ணொருவர் இவ்வாறு கூறினார் "நான் வேடுவிச்சிக்கு ஆட விருப்பமாக இருந்தன். எனது கணவரும் அனுமதியளித்தார். எனக்கு சிறு பிள்ளைகள் இருக்கிறார்கள். கூத்தாட விருப்பமிருந்தும் நான் உடம்பான ஆள் என என்னை ஆடவிடல்ல" (நேர்காணல்: ஜெ.அனலாஜோதி). எனவே, கூத்தாட விருப்பமிருந்தும் சமூகக் கட்டிறுக்கத்தால் தடைகள் ஏற்படுவதனையும் அறியலாம்.

• ஆனால், 1992ஆம் ஆண்டில் நெல்லிச்சேனையில் கோவலன் சரித்திரம் வடமோடிக் கூத்து 10 – 12 வயதுக்குட்பட்ட ஏழு சிறுமிகள் பத்துப் பாத்திரங்களைத் தாங்கி ஆடியுள்ளனர். 18 களரிகள் மட்டக்களப்பில் கோவிலிலும் பொது இடங்களிலும் ஆடப்பட்டன (நேர்காணல்: க.மயில்வாகனம்). பாரம்பரிய கூத்தரங்கின் சமுதாய நிலைப்பட்டதான தொடர் செயற்பாட்டினூடாக ஊருக்குள் இது பழக்கப்பட்டது.

பெண்கள் கூத்தில் பங்குகொண்டு ஆடித் தாங்களும் பலசாலிகள், திறமையானவர்கள், தகுதியானவர்கள் என்பதனை வெளிப்படுத்திச் சாதித்துள்ளனர். கூத்தாடியமையால் பெண்களுக்கு ஆளுமை விருத்தியும் ஏற்பட்டுள்ளதோடு, கூத்துப் பற்றியும், அதன் அழகியல் பற்றியும் அறிந்துள்ளனர். அத்தோடு, தன்னம்பிக்கை துணிச்சல், சாதிக்கும் தைரியம் ஆகியவை வெளிப்பட்டுள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

கூத்து பாரம்பரியமாகத் தொடர்செயற்பாட்டுடன் ஆடப்பட்டபோது அதில் இவ்வாய்வாளரால் பங்குகொண்டு அவதானிக்கப்பட்டமை முக்கியவிடயமாகும். அவ்வாறு பழகியமை சட்டம் கொடுத்தல் நிகழ்வு, சதங்கையணி விழா, சம்பிரதாயம், வேட உடை ஒப்பனை தொடர்பான தயாரிப்பு பயிற்சிகள், அரங்கேற்று விழா, 2ஆம், 3ஆம் களரியேற்றம் எனக் தொடர்ந்து சென்றது. இந்த ஒவ்வொரு செயற்பாட்டிலும் பெண்கள் கலந்துகொண்டு பிரதான, துணைப் பாத்திரங்கள் எனப் பல பாத்திரங்களைத் தாங்கி ஆடினர். கட்டியக்காரன், பறையறைவோன், கிழவி, தோழி, பாடினி, தாய், பிரதான கதாநாயகி எனப் பல்வகைமைப் பாத்திரப் படைப்புக்களையும் பெண்களே தாங்கியாடிக் கூத்திற்கும் கூத்தர் சமூகத்திற்கும் புகழைத்தேடிக் கொடுத்தனர். ஆண் கூத்திற்கும் பெண்களே தாங்கியாடியமையும் இடம் பெற்றது (ஆய்வாளரின் நேரடி அனுபவம்). ஆணாதிக்கப் பண்பாடுச் சிந்தனையின் கட்டமைப்பு இங்குக் கட்டவிழ்க்கப்பட்டமை சமுதாயத்திற்கு வெற்றியைக் கொடுத்தது.

பெண்கள் கூத்தின் ஒவ்வொரு செயற்பாட்டிலும் தமது அறிவையும் ஆளுமையையும் மிகவும் நிதானமாகப் பிரயோகித்தனர். கூத்தாடும்போது பழைய கூத்துக் கலைஞர்களும், கூத்துப் பார்த்த மூத்த பெண்களும் சுற்றியிருந்தபோது சற்றுப் பயம் ஏற்பட்டாலும் இரண்டு மூன்று களரி அடிக்க அச்சமூகத்துடன் தாமாகவே கூத்தர் இணைந்து செய்வர். சமுதாயமும் இந்தக் கூத்தர் குழாமுடன்

இணைந்து கொண்டதும் ஒருவருக்கொருவர் நம்பிக்கையையும் உற்சாகத்தையும் கொடுத்தது. பெண் கூத்தருக்குக் கூத்தாட வேண்டும் எனும் பெரு விருப்பம் வலுவாக அதன் புரிதலுடன் ஏற்பட்டதால் ஆசையோடு ஆடியமை, ஊருக்குள் கூத்தாடிய மூத்த கலைஞர்கள் அபிப்பிராயம் கூறிச்செய்து காட்டியமை, கூத்தின் சமுதாய அரங்கின் உயிர்ப்பை வலுப்படுத்தியது.

இது பற்றி கூத்தாடிய பெண்கள் குறிப்பிடுவதைப் பின்வருமாறு நோக்கலாம். "எங்களுக்கு கூத்துப் பழக ஆரம்பிக்கும்போது தயக்கமாக இருந்தது. கூத்து பரம்பரையாக ஆடிவந்த இடம். பழைய கூத்தர்கள் வாழும் ஊர். களரிக்குள் ஆடுறது முதலில் தயக்கமாக இருந்தாலும் பிறகு எங்களுக்கு விருப்பம் வந்து விட்டது" (நேர்காணல்) என்றார் மழைப்பழம் கூத்தாடிய ந.துஸ்யந்தி. "எங்களாலும் ஆட முடியும் என்று உணர்ந்தோம். தொடர்ந்து ஆடியதும் ஊராக்கள் உற்சாகப்படுத்தி, வாழ்த்தி ஊக்கமளித்தமையும் கூத்துக்குள் வாழ்வதற்கு வழி ஏற்படுத்தியது. ஆற்றுகை மையத்தினூடாக சு.சந்திரகுமார் கற்பித்தபோதே இந்த வாய்ப்புக் கிடைத்தது" (நேர்காணல்) என்றார் கண்டியரசனில் மங்கிலியத்திற்காடிய ஸ்ரீ.நிலுஜா.

"கூத்தாடும் இடத்திற்குப் பஸ்சில் சென்று இறங்கி நடந்து போகும்போது களைப்பாயிடும். ஆடத்தொடங்கியதும் உற்சாகம் வரும். பாட்டு, ஆட்டத்தை சரியாக ஆடிடுவம்" (நேர்காணல்) என்றார் சுந்தரிக்காடிய ச.சரண்யா.

இதனை நோக்கும்போது கூத்தின் ஒவ்வொரு சம்பிரதாயங்களையும் பழகிக் கற்றுக்கொண்டுள்ளமை குறிப்படத்தக்கது. சட்டங்கொடுத்தல், ஒழுங்குபடுத்தல், சதங்கையணி விழாவின்போது பொங்கி மகிழ்ந்து சதங்கை அணிந்தாடுதல், அரங்கேற்றத்தின்போது உடை ஒப்பனைகளை ஒழுங்குபடுத்தித் தாமாக அதில் பரிச்சயமாக ஒவ்வொன்றையும் தமக்குள் உள்வாங்கிக்கொண்டமை இடம்பெற்றது. கூத்தில் தமது முழு ஆளுமைகளையும் பயன்படுத்தினர். அவ்வாறே, கூத்தின் பாடல்களைத் திருத்துதல், மெட்டெடுத்தல், கொப்பி பார்த்தல், சபையோராக நிற்றல், தாளம் போடுதல், திட்டமிடல், முன்னீடுகாரராக நிற்றல் எனப் பல ஒழுங்குமுறைகளையும் சுயமாகப் பெண்களே தொழிற்பட்டு முன்னெடுத்தனர். சதங்கையணி விழா, அரங்கேற்ற விழாக்களைத் திறமையாகச் செய்து, அவ்விழாவிற்குத் தம்மை இயைபாக்கிக் கொண்டனர்.

இதேபோன்றே, பெண்கள் கூத்து மீளுருவாக்கத்தின் போதான முழுப் பரிமாணங்களிலும் கலந்துகொண்டனர். பெண்கள் கூத்தை திறன்பட ஆடுதல், நேரத்திற்கு வருதல், பயிற்சி எடுத்தல், பாடுதல் என்பவற்றை நன்றாகச் செய்தனர் (நேர்காணல்: கி.கலைமகள்). அதுமட்டுமல்ல, கூத்து தொடர்பான கலந்துரையாடல்களில் ஈடுபட்டு ஆக்கபூர்வமான கருத்துக்களைத் தந்தமை, கூத்து புதிதாக எழுதுதல், பாடல் வரிகளைச் சேர்த்தமை, கொப்பிபார்த்தல், பிற்பாட்டு, உடை ஒப்பனைகளை ஒழுங்குபடுத்தியமை எனப்பலவற்றில் பெண்கள் விருப்பத்துடனும் உற்சாகத்துடனும் பங்குபற்றி செயற்பட்டனர். கூத்தின் மீளுருவாக்கத்தின் முழுப் பரிமாணத்தையும் விளங்கிச் செயற்பட்டுள்ளனர்.

வன்னிப் பேரழிவின்போது அதில் பாதிக்கப்பட்டு முகாமில் மக்கள் இருந்தபோது மன நிம்மதியடைய கூத்தாடிய வேளையில் பெண்களும் ஆடியமை குறிப்பிடத்தக்கது. தமது உடமைகள், உறவினர்கள், நிலங்களை இழந்து மிகவும் தாக்கப்பட்டு முகாம்களில் தமது வாழ்க்கையை கழித்தபோது ஒன்றுகூடும் சந்தர்ப்பங்களில் உள நலனைப் பெற்று மகிழ்வதற்கு ஆண்களும் பெண்களும் சேர்ந்து கூத்தாடியுள்ளனர். வற்றாப்பளை கண்ணகி அம்மன் கோவில் வைகாசிப் பொங்கல் காலத்தில் கோவலன் கூத்து, காத்தவராயன் கூத்து போன்றவை விடியவிடிய ஆடப்பட்டன. கூத்தின் சமுதாய அரங்கப் பண்பு இதிலிருந்தது. பெண்களின் பங்களிப்பு அதிகமாகக் காணப்பட்டது. பெண் வேடங்களைப் பெண்களே தாங்கி ஆடினர். காத்தவராயன் கூத்தில் முற்பகுதியில் பெண்ணும் பிற்பகுதியில் பெண்ணுக்கு ஆணும் வேடம் போட்டாடினர். இவ்வாறு வன்னி முகாம்களில் சமூகமாக இணைந்து கூத்து மரபுகளுக்கு மாறாகப் பெண்கள் கூத்தாடுகின்றார்கள் என்பதும் கோவலன் கூத்தை இளம் பெண்ணொருவர் பழக்கியிருக்கிறார் என்பதும் குறிப்பிடத்தக்கது (ஜெயசங்கர்.சி:2010:17–22).

பாரம்பரியமாகக் கூத்தாடப்படும் இடங்களில் பெண்கள் கூத்தாடுவதற்கு ஆர்வமாக இருந்தும் அனுமதிக்கப்படவில்லை. பெண்கள் தமது திறன்கள், ஆற்றல்கள் என்பவற்றை வெளிப்படுத்த சந்தர்ப்பம் கொடுக்கப்படவில்லை. காரணம், ஆண்களால் பெண்கள் தொடர்பாகக் கட்டமைக்கப்பட்டவைகளும் பண்பாட்டுக் கட்டிறுக்கங்களுமே எனலாம்.

மிகப்பெரிய சாதனைகளைப் படைத்த பெண்கள் தமது ஆற்றல், அறிவு, கொண்டாட்டம் என்பவற்றை வெளிப்படுத்த முடியாதநிலை ஏற்பட்டுள்ளது. பிரசவ வலியின் உச்சத்தைத் தாங்கும் பெண்களுக்குக் கூத்தாட முழுப் பலமும் உண்டு. விளையாட்டுத் துறையில் தன்னை வெளிப்படுத்தி உடல் வலிமைகொண்டுள்ள பெண்களுக்கு கூத்தாடுவது பெரிய விடயமல்ல. பார்ப்பனிய ஆணாதிக்கக் கட்டமைப்பானது பெண்கள் தீண்டத்தகாதவர்கள், உடல், மன வலிமை குறைந்தவர்கள் எனக் கருத்துருவாக்கியுள்ளது. ஆனால், பெண்கள் இவ்வாறான கட்டமைப்புக்களை உடைத்து, பிற்காலத்தில் தமது திறன், ஆற்றல்களை வெளிப்படுத்தியுள்ளனர். கலை இரசனையும் பிறருக்குக் கூத்துப் பற்றிச் சொல்லிக் கொடுக்கும் திறனுள்ள பெண்கள் கூத்தாட விரும்பியிருக்கமாட்டார்களா? நிச்சயமாக விரும்பி

யிருப்பர். ஆனால், பெண்கள் கூத்தில் ஆடுவதற்கு இடம் கொடுக்கப்படவில்லை என்பதே உண்மையாகும்.

பெண்கள் கூத்தாடும்போது சமுதாயரீதியான இறுக்கம், ஆணாதிக்க எண்ணக்கரு போன்றவற்றால் சவால்களை எதிர்கொள்வோமோ என்ற பயமும் காணப்பட்டது. அத்தோடு, சில பெண்களுக்கு உடல்ரீதியான தளர்வும் கூத்தாடும்போது காணப்பட்டது. "மாதவிலக்குக் காலங்களிலும் கூத்தாட முடிந்தது. ஆடும் போது உற்சாகமாக இருந்தது. ஆடி முடிய சோர்வு வந்தது" எனக் (நேர்காணல்: கி.கலைமகள் கூறுவது கவனத்திற்குரியது. ஆனாலும், சில பெண்களின் உடல்நிலை பலவீனமாகக் காணப்பட்டால் இச்சந்தர்ப்பத்தில் ஆடமுடியாத நிலையும் ஏற்படும் (நேர்காணல்: வி.தீபகங்கா). குறிப்பாக, இரத்த ஓட்டம் அதிகமாக இருந்தபோது உடல் தளர்வடைந்து, மருத்துவப் பரிசோதனை பெற்றனர். வைத்தியர் இந்தக் காலங்களில் ஆடவேண்டாம் என்று ஆலோசித்தார் (நேர்காணல்: ஸ்ரீ.நிலுஜா, இ.ரேவதி, வி.தீபகங்கா) எனும் கருத்துக்களையும் கூத்தாடிய பெண்கள் முன்மொழிந்தனர். சில பெண்களுக்கே கூத்தாடும் காலங்களில் இவ்வாறான பலவீனம் உடலில் ஏற்றட்டமையைத் தவிர வேறு காரணமில்லை. பெண்கள் விளையாட்டுத்துறையில் ஓட்டம், உயரம் பாய்தல், நீளம் பாய்தல், பாரங்களைத் தூக்குதல், குத்துச் சண்டை, மல்யுத்தம், சாகசங்கள் காட்டுதல், கராத்தேயில் ஈடுபடுதல் போன்றவைகளிலிலும் ஈடுபடுகின்றனர். இராணுவத்தினர், விடுதலை இயக்கங்களிலும் பெண்கள் கடும் பயிற்சிகளைச் செய்து தேர்ச்சியடைந்து தமது திறன்களை வெளிப்படுத்துகின்றனர். பாரம்பரியக் கூத்துச் சூழலில் பெண்கள் கூத்தாற்றுகைகளில் பண்பாட்டு இறுக்கம் காரணமாகப் பங்குகொள்ளவில்லை. குறிப்பாக, கோயில்களில் கூத்தாடும்போது, மாதவிலக்குக் காலங்களில் பெண்களால் ஆட முடியாமைக்குக் காரணமும் சமூக சமயக் கட்டுறுக்கமாகும்.

ஆனால், 2012ஆம் ஆண்டிலிருந்து கிழக்குப்பல்கலைக்கழக மாணவிகள் சமுதாயத்தில் கூத்தைத் தொடர் செயற்பாட்டுடன் பழகி அரங்கேற்றும் பொழுது, மத்தளத்தை அடித்துப் பார்ப்பதும் தாளம் வாசித்து கொப்பி பார்ப்பதும் வலுப்பெற்றது. இளம் பெண் தலைமுறையினருக்கு இயல்பாகவே கூத்துப் பழகும் சந்தர்ப்பமும் ஆளுமை வெளிப்பாடும் மேம்பட்டது. இது கூத்தர் சமூகத்தை வியப்பில் ஆழ்த்தியது. கொப்பி பார்த்து பாட்டையும், மெட்டையும் எடுத்துக்கொடுக்க அதைக் கூத்தர் பாடி ஆடுவதும், அண்ணாவியார் மத்தளம் அடித்தலும் நிகழ்ந்தது. தாளம் வாசித்தல் சபையோராகவும் நின்று கூத்தை நடாத்தி முடித்தனர் (ஆய்வாளரின் நேரடி பங்குகொள் அவதானம்).

**கூத்தரங்கின் தொடர் செயற்பாட்டில் பெண்களின் பங்களிப்பு**

கூத்தரங்கின் தொடர் செயற்பாட்டில் (Process) சமுதாயத்தில் பெண்களின் பங்களிப்பு அடுத்த முக்கிய வெளிக்கொணர்கையாகும். இவை வசதிக்கேற்ப நுணுக்கமாகப் பிரித்து ஆராயப்படுகின்றது.

பெண்கள் கூத்தின் சமுதாய முன்னெடுப்பைத் தனது வாழ்வியலுடன் இணைந்ததாகப் பாதுகாக்கின்றனர். கூத்தின் தொடக்கத்தில் கூத்தாடும் கணவன், மகன்மார், தம்பி, அண்ணன்மார் போன்றோர் கூத்தாடுவதற்குப் பெண்களே அனுமதியளிக்கின்றனர். கூத்துப் பழகி அரங்கேற்றும் வரையும் அண்ணாவியாருக்கும், கூத்தருக்கும் பல உதவிகளைப் பெண்கள் வழங்குகின்றமை கருத்தில் கொள்ளப்பட வேண்டியவையாகும். குறிப்பாக, உணவு சமைத்துக் கொடுத்தல், உடுப்புத் தோய்த்தல் போன்றன குறிப்பிடத்தக்கன.

கூத்தாடும் இடத்தைத் துப்பரவு செய்தல், களரி கட்டுதல், தமது உறவினர்கள் கூத்தாடும்போது உடுப்புக்கட்டுதல், வாழ்த்துக்களைத் தெரிவித்தல் போன்றன கூத்து ஆற்றுகைச் செயற்பாட்டின் போது பங்களிப்பாக விரிவாகும்.

கூத்தாடியதன் பின் பெண்களின் பங்களிப்பாகப் பின்வருவனவற்றை வரிசைப்படுத்தலாம்.

1. கூத்தருக்கும் அண்ணாவியாருக்கும் பட்டம் வழங்குதல்.

2. கூத்தின் கதையும், கூத்து ஆற்றுகை செய்யப்பட்ட முறைமையும் பரவலாக்குதல்.

3. கூத்தின் வரலாறு, அண்ணாவியார் வரலாறு ஆகியவற்றை நினைவுகளில் வைத்து கைமாறுதல்.

ஆனால், பாரம்பாரியக் கூத்தாற்றுகைச் சூழலில் பெண்களுக்குக் கூத்தாட அனுமதியளிக்கவும் இல்லை. அதில் வரும் கதைக்கரு பெண்களுக்குரியதாகவும், அவர்களுக்கான வாழ்தலுக்குரியதாகவும் இல்லை எனலாம். இருந்தபோதிலும் அந்த எண்ணக்கருவுடன் அவர்கள் வாழவில்லை என்பதும் குறிப்பிடத்தக்கது. ஏனெனில், அவர்கள் மத்தியில் ஆற்றுகை செய்யப்படும் கூத்தாற்றுகையும் அதில் வாழ்தலும் அவர்களுக்குச் சிறப்பானதாக அமைந்தது. அந்தந்த இடத்தில் அவையவை சிறப்பானதாக, தரமானதாக அமைந்தால், அவர்களுக்கு மகிழ்வைக் கொடுத்தால் அதன் போக்கை ஓரங்கட்டக் கூடாது எனும் கருத்தும் உண்டு. எவ்வாறாயினும், பாரம்பரியக் கூத்தரங்கின் ஆற்றுகைச் சூழலில் ஆதிக்க அதிகாரக் கட்டிறுக்கம் அதன் உள்ளடக்கத்திலும் ஆற்றுகையிலும் நிலவுகின்றது. ஆணாதிக்கக்

*கருத்துருவாக்க வெளிப்பாட்டின் அமைவிடமாகக் கூத்துக்கள் பாரம்பரியத் தளத்தில் அமைகின்றன எனும் கடும் விமர்சனமும் உண்டு.*

**முடிவுரை**

*பாரம்பரியக் கூத்தில் திரைமறைவில் பெண்கள் கூத்து ஆற்றுகைக்குப் பெரும் பங்களிப்புச் செய்கின்றனர். அத்துடன் கல்வி நிறுவனங்களில் கூத்தாடும் போது அதில் ஈடுபட்டு ஆற்றலையும் திறனையும் வெளிப்படுத்துகின்றனர். எனினும், இன்றுவரையும் ஊர்களில் பெண் பாத்திரங்களை ஆண்களே தாங்கி ஆடும் போக்கே உள்ளது. இதற்குச் சமூக பண்பாட்டுக் கருத்தியல் பெரும் தாக்கம் செலுத்துகின்றது.*

**உசாத்துணை நூல்கள்**

1. ஜெயசங்கர்.சி, (2010), ''வன்னிப் பேரழிவின்பின் நலன்புரி முகாம் வாழ்வும் கூத்து ஆற்றுகைகளும் – சமூக அரசியல் நோக்கு'' (தொகு) முத்தையா.இ., தமிழர் பண்பாட்டு வெளியில் நிகழ்த்துகலைகளும் உலக நோக்கும், சென்னை: காவ்யா.

**நேர்கண்டோர் விபரம்**

1. அரசரெட்ணம்.ஐ., 72, அண்ணாவியார், பூசாரி, வள்ளுவர் வீதி, கரவெட்டி, 14.03.2013.
2. அனலாஜோதி.ஜெ., 40, வீட்டுத்தலைவி, நாவலடி, 04.07.2014.
3. கந்தப்போடி.க., (வயது), கமம், அண்ணாவியார், கொத்தியாபுல, 10.09.2014.
4. சர்மி.ஐ., 29, வீட்டுத்தலைவி, தன்னாமுனை, 25.09.2013.
5. சரணியா.ச., 24, மாணவி, 3ம் வருடம், கிழக்குப் பல்கலைக்கழகம், வந்தாறுமூலை, 15.08.2013.
6. தம்பிமுத்து.வே., 65, விவசாயி, அண்ணாவியார், சித்தாண்டி, 21.04.2012.
7. தீபகங்கா.வி., 24, மாணவி, 3ம் வருடம், கிழக்குப் பல்கலைக்கழகம் வந்தாறுமூலை, 26.05.2012.
8. துஸ்யந்தி.ந., 24, மாணவி, 3ம் வருடம், கிழக்குப் பல்கலைக்கழகம் வந்தாறுமூலை, 15.08.2013.
9. நோஞ்சிப்போடி.க., 97, கமம், அண்ணாவியார், கன்னங்குடா, 23.07.2011.
10. பசுபதிப்பிள்ளை.மா., 60, கமம், அண்ணாவியார், புதுமண்டபத்தடி, 16.04.2014.
11. பரமக்குட்டி.வெ., 69, கமம், அண்ணாவியார், கன்னங்குடா, 08.08.2013.
12. பாக்கியம்.ந., 75, வீட்டுத்தலைவி, முனைக்காடு, 22.03.2014.
13. பாக்கியம்.ம., 62, வீட்டுத்தலைவி, தாழையடிவீதி, தன்னாமுனை, 25.09.2013.
14. புவனேஸ்வரி.தே., 41, வீட்டுத்தலைவி, வாதக்கல்மடு, 05.10.2013.
15. வல்லிபுரம்.வே., 75, கமம், அண்ணாவியார், மகிழடித்தீவு, 03.09.2013.
16. நிலுஜா.ஸ்ரீ., 24, மாணவி, 3ம் வருடம், கிழக்குப் பல்கலைக்கழகம், 26.05.2012.
17. கலைமகள்.கி., உதவி விரிவுரையாளர், கிழக்குப் பல்கலைக்கழகம், வந்தாறுமூலை, 13.05.2013.
18. தங்கம்மா.ப., 57, வீட்டுத்தலைவி, அண்ணாவியின் மனைவி, கன்னங்குடா, 15.03.2013.
19. பரமேஸ்வரி.ஞா., 53, கூத்தர், வீட்டுத்தலைவி, குருந்தையடி முன்மாரி, 26.06.2012.
20. யோகநாதன்.சி., 62, அண்ணாவி, பூசாரி, கொத்தியாபுலை, 26.06.2020.
21. கிருஷ்திகா.கி., 13, மாணவி, கூத்தர், நாவலடி, 03.07.2014.
22. சத்தியரூபி.க., 22, கலைவாணி வீதி, கொம்மாதுறை, 15.09.2014.
23. பவளக்கொடி.மு., 67, வீட்டுத்தலைவி, கொம்மாதுறை, 01.10.2012.